**அபாய எச்சரிக்கை:** முன்னே உள்ள சாலையில் இயற்கைக் காரணங்களினால் அல்லது ஆட்களின் வேலையினால் அபாயம் ஏற்படலாம் என்று டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது.



**Danger Warning:** This sign cautions the driver about the possibility of danger either man-made or due to natural causes, ahead on the road.

---

**முன்னே உள்ள சாலையில் காது கேளாதவர்கள் இருக்கக் கூடும்:** வாகனங்களின் ஹாரன் ஒலியைக் கேட்கமுடியாத காது கேளாதவர்கள் (வாகனங்களின் ஹாரன் சத்தம் கேட்காதவர்கள்) இருக்கக் கூடும் என்று இந்த அடையாளம் காட்டுகிறது. ஆகவே, எந்த ஒரு விபத்தையும் தவிர்ப்பதற்காக டிரைவர் மிகவும் கவனத் துடன் ஓட்டிச் செல்ல வேண்டும்.



**Deaf persons likely to be on the road ahead:** This sign shows that there is a possibility of deaf persons (who are unable to hear the sound of horns of vehicles) on the road ahead. So the driver should drive very cautiously to avoid any accident.

---

**முன்னே உள்ள சாலையில் பார்வை இல்லாதவர்கள் இருக்கக் கூடும்:** முன்னே உள்ள சாலையில் பார்வை இல்லாதவர்கள் இருக்கக் கூடும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. ஆகவே, எந்த ஒரு விபத்தையும் தவிர்ப்பதற்காக டிரைவர் மிகவும் கவனத் துடன் ஓட்டிச் செல்ல வேண்டும்.



**Blind persons likely to be on the road ahead:** This sign indicates that there is a possibility of blind persons on the road ahead. So the driver should drive very cautiously to avoid any accident.

---

**சைக்கிள் கிராஸிங்:** பெரிய சாலையில் சைக்கிள் பாதை குறுக்கிடுகிறது அல்லது சைக்கிளில் செல்வோர் அதை பயன்படுத்துகின்றனர் என்று இந்த அடையாளம் காட்டுகிறது. பெரிய சாலையில் சைக்கிளில் செல்வோர் பாதுகாப்பாகக் கடந்து செல்ல டிரைவர் கவனமாகத் தாண்டி ஓட்டவேண்டும்.



**Cycle Crossing:** This sign shows that there is a cycle path crossing the major road or is used by cyclists. The driver carefully crosses to let cyclists cross the major road safely.

---

**சைக்கிள் பாதை முன்னே:** முன்னே ஒரு சைக்கிள் பாதை இருப்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. சைக்கிளில் செல்வோருக்கு எந்த ஒரு விபத்தும் ஏற்படாமல் இருக்க டிரைவர் கவனமாக இருக்க வேண்டும்.



**Cycle Route Ahead:** This sign shows that there is a cycle route ahead. The driver should be carful to avoid any mishap with cyclist.

**அபாயகரமான குழி:** முன்னே சாலையில் ஒரு குழி இருப்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. ஓட்டுநர் வேகத்தைக் குறைத்து குழியைத் தாண்டி சாலையில் பாதுகாப்பாகச் செல்ல இது உதவுகிறது.



**Dangerous Dip:** This sign warns that there is a dip on road ahead. This helps driver to reduce the speed to cross the dip on the road safely.

---

**வேகத் தடை:** பள்ளிகள், மருத்துவமனைகள், நெரிசலான பகுதிகள் போன்ற குறுக்குச் சந்திப்புகளில் வாகனங்களின் வேகத்தைக் குறைப்பதற்காக, பொதுவாக இந்த அடையாளங்கள் வைக்கப்படுகின்றன.



**Speed Breaker:** These signs are usually placed before intersections, schools, hospitals, crowded areas, etc., to reduce the speed of vehicles.

---

**இடரும் பட்டை:** வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்திட இடரும் பட்டைகள் சாலையில் வைக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டி ஓட்டுநரை எச்சரிப்பதற்காக இந்த அடையாளம் வைக்கப்பட்டுள்ளது.



**Rumble Strip :** This sign is installed on highways to caution the driver about the rumble strips provided on the road to control the speed of vehicles.

---

**கரடுமுரடான சாலை:** கரடுமுரடான சாலை முன்னே இருக்கிறது என்பதால் வேகத்தைக் குறைத்து, கரடுமுரடான சாலையைக் கடக்க வேண்டும் என ஓட்டுநரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது.



**Rough Road:** This sign cautions the driver about the rough road coming ahead, so that he should reduce speed to cross the rough road safely.

---

**அபாயகரமான பள்ளம்:** எதிரே உள்ள சாலையில் அபாயகரமான பள்ளம் அல்லது குழி இருக்கிறது. ஓட்டுநர் வேகத்தைக் குறைத்து, பள்ளத்தைத் தாண்டவேண்டும் என்று இந்த அடையாளம் ஓட்டுநரை எச்சரிக்கிறது.



**Dangerous Ditch:** This sign cautions the driver about the dangerous ditch or depression on the road coming ahead, so that he should reduce speed to cross the ditch safely.

**தளர்வான சரளை மண்:** மலைச்சாலைகளில் தளர்வான மண் அல்லது சரளைக் கற்கள் இருப்பதால் இந்த அடையாளம் பொதுவாக மலைச்சாலைகளில் வைக்கப்படுகிறது. வேகமாகச் செல்லும் வாகனங்களினால் சரளைக் கற்கள் சிதறக்கூடும் என்பதால், எதிர்பாராத நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக, ஓட்டுநர் மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டவேண்டும்.



**Loose Gravel:** Sign is usually placed on hill roads where loose earth or gravel are lying on the road. This gravel can be thrown up by fast moving vehicles. Driver must drive slowly and carefully to avoid any unforeseen circumstances.

**வழுக்கும் சாலை:** முன்னே உள்ள சாலை வழுக்கும் நிலையில் இருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. தண்ணீர் அல்லது எண்ணெய்க் கசிவினால் இந்த வழுக்கல் ஏற்படலாம். ஓட்டுநர் எந்த ஒரு விபத்தையும் தவிர்ப்பதற்காக இந்த அடையாளத்தைக் கண்டதும் வேகத்தைக் குறைக்க வேண்டும்.



**Slippery Road:** This sign shows the slippery condition of the road ahead. This could be due to seepage of water or an oil spill etc. The driver should slow down upon seeing this sign to avoid any crash.

**பனியினால் சாலை வழுக்கல்:** முன்னே உள்ள சாலையில் பனி அல்லது ஐஸினால் வாகனம் வழுக்கும் என்று இந்த அடையாளம் ஓட்டுநரை எச்சரிக்கிறது. ஓட்டுநர் எந்த ஒரு விபத்தையும் தவிர்ப்பதற்காக இந்த அடையாளத்தைக் கண்டதும் வேகத்தைக் குறைத்து கவனமாக ஓட்ட வேண்டும்



**Slippery Road Because of Ice:** This sign cautions the driver about the presence of ice or snow on the road ahead, which can cause slipping of vehicles. Driver must slow down and drive carefully to avoid any mishap.

**திறப்பு அல்லது தொங்கு பாலம்:** முன்னே ஒரு தொங்கு பாலம் அல்லது திறப்பு இருக்கிறது என்று காட்டி, ஓட்டுநர் பாதுகாப்பாக பாலத்தைக் கடப்பதற்காக இந்த அடையாளம் ஓட்டுநரை எச்சரிக்கிறது.



**Opening or Swing Bridge:** This sign cautions the driver about the opening or the swing bridge ahead, so that driver can cross the bridge safely.

**மேலே கேபிள்கள்:** முன்னே உள்ள சாலைக்கு மேலே மின்சார வயர்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன என்று காட்டி ஓட்டுநர் பாதுகாப்பாக ஓட்டிச் செல்ல வேண்டும் என்று ஓட்டுநரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது.



**Overhead Cables:** This sign cautions the driver about the overhead electricity cables hanging on the road ahead, so that driver can drive safely.

**விளையாட்டுத் திடல் முன்னே:** முன்னே உள்ள சாலைக்கு அருகில் விளையாட்டுத் திடல் இருக்கிறது என்று டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது. டிரைவர் விபத்து எதுவும் ஏற்படாமல் தவிர்க்க விளையாட்டுத் திடலுக்கு அருகில் வேகத்தைக் குறைக்க வேண்டும்.



**Playground Ahead:** This sign cautions the driver about the playground near the road ahead. The driver should slow down near the playground area to avoid any mishap.

**நதிக்கரை அல்லது படகுத்துறை:** இந்தச் சாலை படகுத்துறை அல்லது நதிக்கரை நோக்கிச் செல்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. டிரைவர்கள் விழிப்புடன் இருந்து கவனமாக ஓட்ட வேண்டும்.



**Quayside or River Bank:** This sign indicates that this road leads on to the quay or river bank. Drivers should be alert and drive cautiously.

**தடைகள் முன்னே:** பல சமயங்களில் சாலைகள் சுங்கக்கட்டணம் வசூல் மையம்/ சோதனைச் சாவடிகள் போன்றவற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. இத்தகைய இடங்களில் தடைகள் வைக்கப்பட்டுள்ளன. டிரைவர் வேகத்தைக் குறைத்து, முன்னே உள்ள தடையின் விதிகளைப் பின்பற்ற வேண்டும்.



**Barrier Ahead:** Many times the road passes through toll collection points/ check posts etc., with barriers on such places. The driver should reduce speed and follow the procedure of the barrier ahead.

**திடீர் பக்கக் காற்று:** சாலையில் முன்னே வாகனத்தின் பாதுகாப்புக்கு ஆபத்தான வகையில் திடீரென பக்கக் காற்று வீசக்கூடும் என டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது.



**Sudden Side Winds:** This sign cautions the driver about the sudden side winds on the road ahead which can dangerously compromise the safety of vehicles.

**சுரங்கப்பாதை முன்னே:** சாலையில் சுரங்கப் பாதை முன்னே இருக்கிறது. டிரைவர் பாதுகாப்பாக தாண்டிச் செல்ல வேண்டும் என்று இந்த அடையாளம் டிரைவரை எச்சரிக்கிறது.



**Tunnel Ahead:** This sign cautions the driver about the tunnel ahead on the road, so that driver can cross it safely.

**படகு:** நதியைக் கடப்பதற்கு படகுப் போக்குவரத்து சேவை இருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Ferry:** This sign shows that ahead there is a ferry service available to cross the river.

**டிராம்கள் கிராஸிங்:** சாலையில் முன்னே ஒரு டிராம் கிராஸிங் இருக்கிறது என்பதையும், டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாகக் கடந்து செல்ல வேண்டும் என்று இந்த அடையாளம் காட்டுகிறது.



**Trams Crossing:** This sign indicates that a tram crossing is on the road ahead, so that the driver may reduce the speed and cross safely.

**உருண்டு விழும் பாறைகள்:** மிக மோசமான வானிலையால் மலைச் சாலைகளில் மண் சரிவுகள் ஏற்பட்டு, பாறைகள் உருண்டுவிழும். முன்னே உள்ள சாலையில் இதுபோன்று பாறைகள் உருண்டுவிழக் கூடும் என்று இந்த அடையாளம் காட்டுகிறது. டிரைவர் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக டிரைவர் கவனமாக ஓட்ட வேண்டும்.



**Falling Rocks:** In hill roads rocks fall on road during landslides in extreme weather. Sign shows that on road ahead such rock falls are possible. Driver should drive carefully to avoid mishaps.

**கால்நடை கிராஸிங்:** சாலையில் கால்நடைகள் குறுக்கே வரக்கூடும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. பிராணிகள் போக்குவரத்து வாகனங்களைக் கண்டு திடீரென மிரண்டு பெரிய விபத்துக்கள் ஏற்படக்கூடும். எனவே இந்த அடையாளம் இருக்கும் இடங்களில் கவனமாக டிரைவிங் செய்ய வேண்டும்.



**Cattle Crossing:** This sign shows there is great possibility of cattle straying on the road. Cattle on the road can cause major crashes as animals react unexpectedly in traffic. So careful driving is needed wherever this sign is placed.

**காட்டு மிருகங்கள்:** காட்டு மிருகங்கள் திடீரென முன்னே இருக்கும் சாலையில் வரக்கூடும் என்பதால், டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்ட வேண்டும் என இந்த அடையாளம் எச்சரிக்கிறது.



**Wild Animals:** This Sign cautions the driver about the possibility of wild animals suddenly coming on the road ahead, so that he can reduce the speed and drive safely.

**விமான நிலையம்:** அருகில் விமானநிலையம் இருப்பதால், வானில் பறக்கும் விமானங்களினால் ஏதேனும் விபத்து ஏற்படக்கூடும் என இந்த அடையாளம் டிரைவரை எச்சரிக்கிறது.



**Airport:** This Sign cautions the driver about a nearby airport to prevent the possibility of any mishap caused by sudden passing of airplanes overhead.




(a) At 200 m

(b) At 50-100 m
(Plain/Rolling)
At 30-60 m (Hill)

**ஆள் இல்லாத லெவல் கிராஸிங்:** ஆள் இல்லாத ரெயில்வே கிராஸிங் இருப்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. தண்டவாளத்தில் ரயில் எதுவும் வரவில்லை என்பதை டிரைவர் தாமே உறுதிப்படுத்திக் கொண்டு, ஆள் இல்லாத லெவல் கிராஸிங்கை மிகுந்த கவனத்துடன் கடக்க வேண்டியிருக்கிறது. கிராஸிங் முறையே 50-100 மீட்டர் அல்லது 200 மீட்டர் தூரத்தில் இருப்பதை ஒற்றை அல்லது இரட்டை சிவப்புப் பட்டைகள் காட்டுகின்றன.

**Unguarded Level Crossing:** This sign indicates that there is a Railway crossing which is not guarded by personnel. This unguarded crossing has to be crossed by the driver himself very cautiously after ensuring that there is no train on the track nearby. Single or double red stripe shows that the crossing is at 50-100 mtrs. or 200 mtrs. respectively.



(a) At 200 m

(b) At 50-100 m
(Plain/Rolling)
At 30-60 m (Hill)

**ஆள் இயக்கும் லெவல் கிராஸிங்:** சாலையில் பல தடவைகளில் ரயில்வே லைன் குறுக்கிடக்கூடும். அவற்றை ஒரு ஆள் இயக்கும் ரயில்வே கிராஸிங் இருப்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. அதற்கு ஏற்ப டிரைவர் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். கிராஸிங் முறையே 50-100 மீட்டர் அல்லது 200 மீட்டர் தூரத்தில் இருப்பதை ஒற்றை அல்லது இரட்டை சிவப்புப் பட்டைகள் காட்டுகின்றன.

**Guarded Level Crossing:** Many times road intersects a railway line. This sign shows that there is a Railway crossing which is guarded by a person. The driver should take extra precautions accordingly. Single or double red stripe indicates that the crossing is at 50-100 or 200 mtrs. respectively.



ஒற்றைக் கூம்பு கிராதி (இயல்பானது)
Single Chevron (Normal)



ஒற்றைக் கூம்பு கிராதி
(>மணிக்கு 100 கிமீ வேகம்)

Single Chevron
(>100 kmph speed)



இரட்டைக் கூம்பு கிராதி
Double Chevron



மூன்று கூம்பு கிராதி
Triple Chevron

**ஒற்றைக் கூம்பு கிராதி ( இயல்பானது):**

**ஒற்றைக் கூம்பு கிராதி (>மணிக்கு 100 கிமீ வேகம்):**

**இரட்டைக் கூம்பு கிராதி:**

**மூன்று கூம்பு கிராதி:**

- நெடுஞ்சாலைகளில் வளைவான இடங்களில் கூம்புக்கிராதிகள் வைக்கப்பட்டுள்ளன. நெடுஞ்சாலையில் முன்னே உள்ள வளைவின் கூர்மை குறித்து முறைவர்களுக்குத் தெரிவிக்க கூம்புக் கிராதி அடையாளம் பயன்படுத்தப்படுகிறது.
- கூம்புக் கிராதி அடையாளங்கள் செங்குத்தான செவ்வக வடிவிலானவை. அவை எப்போதும் ஒரு திருப்பம் அல்லது வளைவுக்கு வெளியே எதிரே வரும் வாகனங்களுக்கு வலது புறமாக நேர் கோட்டில் நிறுவப்பட்டுள்ளன.

**Single Chevron (Normal):**

**Single Chevron (> 100 kmph speed):**

**Double Chevron :**

**Triple Chevron:**

- Chevrons are installed at the curved alignment of highways. Chevron signs are used to inform the drivers about the sharpness of the curve ahead on the highway.
- The Chevron signs are vertical rectangular signs and installed always on the outside of a turn or curve, in line with and approximately at right angle to the approaching traffic.



**அபாயப் பொருள் (இடது):** இந்த அடையாளம் நெடுஞ்சாலையின் இடதுபுறத்தில் ஆபத்தான பொருள் இருப்பது குறித்து டிரைவரை எச்சரிக்கிறது. இந்த அடையாளங்களுக்கு அருகில் டிரைவர் கட்டாயம் வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்டவேண்டும்.

**Object Hazard (Left):** This Sign cautions the driver about the object hazard on the left side of the highway. Driver must slow down vehicle near these signs and drive carefully.



**அபாயப் பொருள் (வலது):** இந்த அடையாளம் நெடுஞ்சாலையின் வலது புறத்தில் ஆபத்தான பொருள் இருப்பது குறித்து டிரைவரை எச்சரிக்கிறது. இந்த அடையாளங்களுக்கு அருகில் டிரைவர் கட்டாயம் வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்டவேண்டும்.

**Object Hazard (Right):** This Sign cautions the driver about the object hazard on the right side of the highway. Driver must slow down vehicle near these signs and drive carefully.



**இருவழி ஆபத்தான மார்க்கர்:** நெடுஞ்சாலையில் முன்னே இருவழி ஆபத்து இருக்கிறது என டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது. இந்த அடையாளங்களுக்கு அருகில் டிரைவர் கட்டாயம் வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்டவேண்டும்.

**Two Way Hazard Marker:** This Sign cautions the driver about the two way hazard on the highway ahead. Driver must slow down vehicle near these signs and drive carefully.


## அத்தியாயம் / Chapter – 4

# தகவல் தரும் சாலை அடையாளங்கள்
# Informatory Road Signs

இந்த அடையாளங்கள் திசை, இலக்கு, சாலையோர வசதிகள் போன்ற தகவல்களை சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு தருவதற்கானவை. பின்வரும் தகவல் சாலை அடையாளங்கள் ஒரு டிரைவருக்கு நேரத்தை மிச்சப்படுத்தி, சுற்றி அலையாமல் இலக்கை அடைவதற்கு உதவுகின்றன. இந்த அடையாளங்கள் பொதுவாக நீலம்/ பச்சை நிறங்களில் காணப்படும். அடையாளத்தில் திசை காட்டும் அம்புக்குறியும், வசதி கிடைக்கும் தூரமும் இருக்கும்.


These signs are meant to provide information on directions, destinations, roadside facilities, etc. to the road user. Following informative road signs help a driver in saving time and reach destinations without wandering around. These signs are normally blue/green in colour. The sign may have direction arrows and also have the distance of facility from the sign.

**மேப் வகை அட்வான்ஸ் திசை அடையாளம்:** இந்த அடையாளம் குறிப்பிட்ட சாலையில் பல்வேறு இலக்குகளை நோக்கிய திசைகளைக் காட்டுகிறது.



**Map type Advance Direction Sign :** This sign shows the directions towards various destinations on that particular road.

**சுற்றுச் சந்திப்பில் மேப் வகை அட்வான்ஸ் திசை அடையாளம்:** முன்னே ஒரு சுற்றுச்சந்திப்பு இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. இலக்குகளுக்கான வழியை அம்புக்குறிகள் காட்டுகின்றன.



**Map type Advance Direction Sign on Roundabout:** This sign shows that there is a roundabout ahead which is showing the way to destinations by arrows.

**அடுக்கப்படும் வகை அட்வான்ஸ் திசை அடையாளம்:** இந்த அடையாளம் குறிப்பிட்ட சாலையில் பல்வேறு இடங்களுக்கான திசைகளைக் காட்டுகிறது.




**Stack type Advance Direction Sign:** This sign shows the directions to various destinations on that particular road.

**கொடி வகை திசை காட்டும் அடையாளம்:** இந்த அடையாளத்தில் இடங்களுக்கான திசைகள் எழுதப்பட்டிருக்கின்றன.




**Flag Type Direction Sign:** This sign shows directions of the destination written on it.

**உறுதியளிக்கும் அடையாளம்:** இந்த அடையாளம் டிரைவருக்கு அவர் சரியான பாதையில்தான் செல்கிறார் என்று உறுதியளித்து, வெவ்வேறு இடங்களுக்கான தொலைவுகளையும் காட்டுகிறது.




**Reassurance Sign:** This sign assures the driver that he is on the right path and also tells the distance of different places.

**இடத்தை அடையாளப்படுத்தும் அடையாளம்:** இந்த அடையாளம் ஒரு பகுதியை அடையாளப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதியின் எல்லை தொடங்குவதை இது காட்டுகிறது. இந்த அடையாளம் தேசிய நெடுஞ்சாலைகளில் வைக்கப்பட்டுள்ளது.




**Place Identification Sign:** This sign identifies the area. This shows the start of the limit of that particular area. This sign is placed on national highways.

**உணவகம்:** முன்னே ஓர் உணவகம் இருக்கிறது என்பதையும், அது இருக்கும் இடத்தின் தொலைவையும் இந்த அடையாளம் காட்டுகிறது. இது பொதுவாக நெடுஞ்சாலை களிலும், நீண்ட சாலைகளிலும் காணப்படுகிறது.




**Eating Place:** The sign shows that there is an eating place ahead and the distance of its location. It is commonly seen on highways and long stretches of road.

**சிற்றுண்டியகம்:** இந்த அடையாளம் சாலையில் முன்னே ஒரு சிற்றுண்டி விடுதி இருப்பதைக் காட்டுகிறது.



**Light Refreshment:** The sign shows there is a light refreshment facility ahead on the road.

**ஓய்விடம்:** இந்த அடையாளம் மோட்டல், லாட்ஜ் அல்லது ஓய்வெடுக்க வசதியான வேறு இடங்களுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. இவற்றை நெடுஞ்சாலைகளில் காணலாம்.



**Resting Place:** The sign is placed near motel, lodge or any other place where a facility for rest is available. These are seen on highways.

**முதல் உதவி வசதி:** இந்த அடையாளம் அருகில் முதல் உதவி செய்யும் வசதி உள்ளது என்பதை காட்டுகிறது. இது விபத்து போன்ற அவசர நிலைமைகளில் பயனுள்ளதாக இருக்கும். இது பொதுவாக நெடுஞ்சாலை களிலும், ரோடுகளிலும் காணப்படுகிறது.



**First Aid Post:** The sign shows that there is a First Aid facility nearby, which is very useful in case of emergency or crashes. These are normally seen on highways and roads.

**டாய்லெட்:** இந்த அடையாளம் சாலையில் முன்னே ஒரு டாய்லெட் இருப்பதை காட்டுகிறது.



**Toilet:** The sign shows there is a toilet facility ahead of the road.

**எரிபொருள் பம்ப்:** இந்த அடையாளம் முன்னே ஒரு எரிபொருள் நிரப்பும் வசதி இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.



**Filling Station (Fuel Pump):** The sign shows that there is a filling station ahead.

**மருத்துவமனை:** இந்த அடையாளம் அருகில் குறிப்பிட்ட தூரத்தில் ஒரு மருத்துவமனை இருப்பதைக் காட்டுகிறது. இந்தப் பகுதி வழியாக டிரைவ் செய்யும்போது டிரைவர் கவனமாக இருக்க வேண்டும். தேவையற்ற இரைச்சலை எழுப்பக்கூடாது.




**Hospital:** This sign shows that there is a Hospital nearby at the prescribed distance. The driver should be careful while driving through this stretch and should not make any unnecessarily noise.

**பொதுத் தொலைபேசி:** இந்த அடையாளம் சாலையில் அருகில் ஒரு தொலைபேசி வசதி இருப்பதைக் காட்டுகிறது.




**Public Telephone:** This sign shows that a Telephone facility is available near the road.

**U - டர்ன் முன்னே:** இந்த அடையாளம் சாலையில் முன்னே ஒரு U-டர்ன் இருப்பதை டிரைவருக்குத் தெரிவிக்கிறது.



**U-Turn Ahead:** This sign informs the driver about a u-turn available ahead on the road.

**நடந்து செல்வோருக்கான சுரங்கப்பாதை:** இந்த அடையாளம் நடந்து செல்வோருக்கு ஒரு சுரங்கப்பாதை/ சப்வே இருப்பதைக் காட்டு கிறது. நடந்து செல்வோர் சாலையைப் பாதுகாப்பாகக் கடப்பதற்கு இந்த வசதியைப் பயன்படுத்த வேண்டும்.



**Pedestrian Subway:** This sign indicates tentry to a pedestrian underpass/subway. Pedestrians should use the facility to cross the road safely.

**நடை மேம்பாலம்:** இந்த அடையாளம் நடந்து செல்வோருக்காக நடை மேம்பாலம் இருப்பதைக் காட்டுகிறது. இது சாலையைப் பாதுகாப்பாகக் கடக்க உதவுகிறது.



**Foot over bridge:** This sign indicates the availability of foot over bridge for pedestrians, which helps them to cross the road safely.

**காவல் நிலையம்:** இந்த அடையாளம் முன்னே அல்லது அருகில் ஒரு காவல் நிலையம் இருக்கும் தகவலைத் தெரிவிக்கிறது.



**Police Station:** This sign gives information about the police station located ahead or nearby.

**ரிப்பேர் வசதி:** இந்த அடையாளம் முன்னே ரிப்பேர் வசதி இருப்பதைத் தெரிவிக்கிறது.



**Repair Facility:** This sign gives information about the repair facility ahead.

**தொழிற்சாலைப் பகுதி:** இந்த அடையாளம் அருகில் ஒரு தொழிற்சாலைப் பகுதி இருப்பதைக் காட்டுகிறது.



**Industrial Area:** This sign gives the information about an industrial area located ahead.

**ரயில்வே ஸ்டேஷன்/ மெட்ரோ ஸ்டேஷன்/ மோனோரயில் ஸ்டேஷன்:** இந்த அடையாளம் முன்னே ரயில்வே/ மெட்ரோ/மோனோரயில் ஸ்டேஷன்கள் இருப்பதைக் காட்டுகிறது.




**Railway Station/Metro Station / Monorail Station:** This sign shows the location of railway/metro/monorail stations ahead.

**சைக்கிள் ரிக்ஷா ஸ்டாண்ட்:** இந்த அடையாளம் முன்னே சைக்கிள் ரிக்ஷா ஸ்டாண்ட் இருப்பதைத் தெரிவிக்கிறது.



**Cycle Rickshaw Stand:** This sign gives information about the cycle rickshaw stand ahead.

**டாக்ஸி ஸ்டாண்ட்:** இந்த அடையாளம் முன்னே டாக்ஸி ஸ்டாண்ட் இருப்பதைக் காட்டுகிறது.



**Taxi Stand:** This sign gives information about the taxi stand ahead.

**ஆட்டோ ரிக்ஷா ஸ்டாண்ட்:** இந்த அடையாளம் முன்னே ஒரு ஆட்டோ ரிக்ஷா ஸ்டாண்ட் இருப்பதைக் காட்டுகிறது.



**Auto Rickshaw Stand:** This sign gives the information about the location of the auto rickshaw stand ahead.

**விமானநிலையம்:** இந்த அடையாளம் முன்னே விமான நிலையம் இருப்பதைக் காட்டுகிறது.



**Airport:** This sign gives the information about Airport located ahead.

**தேசிய மரபுச் சின்னம்:** இந்த அடையாளம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இடம்/ நினைவுச் சின்னம் இருப்பதைக் காட்டுகிறது.



**National Heritage:** This sign gives information about a historical place/ monument of national heritage located ahead.

**நேர்வழி அல்ல:** இந்த அடையாளம் முன்னே நேர்வழி இல்லை என்பதைக் காட்டுகிறது.



**No Through Road:** This sign gives information that there is no through road ahead.

**சுங்கச்சாலை முன்னே:** இந்த அடையாளம் முன்னே சுங்கச் சாலை இருப்பதைக் காட்டுகிறது.



**Toll Road Ahead:** This sign gives information about the toll road ahead.

**எக்ஸ்பிரஸ்வே-க்கு நுழைவு ரேம்ப்:** இந்த அடையாளம் முன்னே எக்ஸ்பிரஸ்வேயில் நுழைவதற்கு சாய்வுதளப் பாதை இருப்பதைக் காட்டுகிறது.



**Entry Ramp for Expressway:** This sign gives information about the availability of an entry ramp for the expressway ahead.

**எக்ஸ்பிரஸ்வேயில் வெளியேற ரேம்ப்:** முன்னே எக்ஸ்பிரஸ்வே-யில் இருந்து வெளியேற சாய்தளப் பாதை இருப்பதைக் காட்டுகிறது.



**Exit Ramp for Expressway:** This sign gives information about the availability of an exit ramp from the expressway ahead.

**எக்ஸ்பிரஸ்வே சின்னம்:** இந்த அடையாளம் முன்னே எக்ஸ்பிரஸ்வே தொடங்குவதைக் காட்டுகிறது.



**Expressway Symbol:** This sign gives information about the beginning of the expressway ahead.

---

**எக்ஸ்பிரஸ்வே முடிவு:** இந்த அடையாளம் முன்னே எக்ஸ்பிரஸ்வே முடிவதைக் காட்டுகிறது. இப்போது ஓட்டுநர் எக்ஸ்பிரஸ்வே இல்லாத சாலைக்குள் நுழைகிறார்.



**End of Expressway:** This sign gives information about the ending of the expressway ahead. The driver is now approaching towards the non-expressway road.

---

**பேருந்து நிறுத்தம்:** இந்த அடையாளம் பேருந்து நிலையம் இருப்பதைக் காட்டுகிறது. அனைத்து பேருந்துகளும் (பொதுப் போக்குவரத்து) இங்கு நிற்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது.



**Bus Stop:** This sign shows the Bus Stop. It shows that all buses (public transport) shall stop here.

---

**அவசர வெளியேற்ற வழி:** இந்த அடையாளம் அருகில் அவசரமாக வெளியேறுவதற்கு ஒரு வழி இருப்பதைக் காட்டுகிறது. பொதுவாக, இந்த அடையாளங்கள் சுரங்கப் பாதைகளிலும் / அண்டர்பாஸ்களிலும் வைக்கப்படுகிறது.



**Emergency Exit:** This sign gives information about the availability of emergency exits nearby. Generally, these symbols are installed at tunnels/ underpasses.

---

**சைக்கிள் நிறுத்தம்:** இந்த அடையாளம் சைக்கிள்களை நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்தைக் காட்டுகிறது.




**Cycle Parking:** This sign shows that this place is reserved for the parking of cycles.

**பார்க்கிங்:** இந்த அடையாளம் அருகில் வாகனங்களை நிறுத்துவதற்கான பார்க்கிங் வசதி இருப்பதைக் காட்டுகிறது.




**Parking:** This sign gives information about the availability of parking nearby for vehicles.

**ஸ்கூட்டர்கள் & மோட்டார்சைக்கிள் பார்க்கிங்:** இந்த அடையாளம் ஸ்கூட்டர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதற்காக மட்டுமே என்பதைக் காட்டுகிறது.




**Scooters & Motorcycle Parking:** This sign shows that this place is for parking scooters and motor cycles only.

**ஆட்டோ ரிக்ஷா பார்க்கிங்:** இந்த அடையாளம் ஆட்டோ ரிக்ஷாக்களை மட்டுமே நிறுத்த வேண்டும் என்பதைக் காட்டுகிறது.




**Auto Rickshaw Parking:** This sign shows that this place is for parking auto rickshaws only.

**சைக்கிள் ரிக்ஷா பார்க்கிங்:** இந்த அடையாளம் சைக்கிள் ரிக்ஷாக்களை மட்டுமே நிறுத்துவதற்காக மட்டுமே இந்த இடம் என்பதைக் காட்டுகிறது.




**Cycle Rickshaw Parking:** This sign shows that this place is for parking cycle rickshaws only.

**டாக்ஸி பார்க்கிங்:** இந்த அடையாளம் கார்களை மட்டுமே நிறுத்துவதற்கான இடம் இது என்பதை காட்டுகிறது.




**Taxi Parking:** This sign shows that this place is for parking cars only.

# தகவல் தரும் சாலை அடையாளங்கள்
## Informatory Road Signs

*Bilingual: English-Tamil*

**ஊனமுற்றோருக்கான பார்க்கிங்:** இந்த அடையாளம் அருகில் ஊனமுற்றோருக்கான பார்க்கிங் இருப்பதைக் காட்டுகிறது.




**Parking for Disabled Person :** This sign gives information about the availability of parking for disabled persons nearby.

**ஊனமுற்றோருக்காக சப்வே/ நடைமேம்பாலத்திற்கு சாய்தளப் பாதை:** இந்த அடையாளம் அருகில் ஊனமுற்றோருக்காக சப்வே/ நடைமேம்பாலத்திற்கு சாய்தள நுழைவு இருப்பதைக் காட்டுகிறது.



**Ramped Entrance to Subway/Over Bridge for Disabled Person:** This sign gives information about the availability of Ramped Entrance to Subway/Over Bridge for disabled person nearby.

**ஊனமுற்றோருக்காக தொலைபேசி வசதி:** இந்த அடையாளம் அருகில் ஊனமுற்றோருக்காக தொலைபேசி வசதி இருப்பதைக் காட்டுகிறது.



**Telephone Facilities for Disabled Person:** This sign gives information about the availability of telephone facilities for disabled person nearby.

**ஊனமுற்றோருக்காக கழிப்பறை வசதி:** இந்த அடையாளம் அருகில் ஊனமுற்றோருக்காக கழிப்பறை வசதிகள் இருப்பதைக் காட்டுகிறது.




**Toilet Facilities for Disabled Person:** This sign gives information about the availability of toilet facilities for disabled person nearby.

**மாநில நெடுஞ்சாலை வழித்தட மார்க்கர்:** இந்த அடையாளம் மாநில நெடுஞ்சாலை தொடங்குவதையும், அதன் எண்ணையும் தருகிறது.




**State Highway Route Marker Sign:** This sign gives information about the beginning of the State Highway and its number.

**தேசிய நெடுஞ்சாலை வழித்தட மார்க்கர்:** இந்த அடையாளம் தேசிய நெடுஞ்சாலை தொடங்குவதையும், அதன் எண்ணையும் தருகிறது.




**National Highway Route Marker Sign:** This sign gives the information about the beginning of the National Highway and its number.

- **எக்ஸ்பிரஸ்வே வழித்தட மார்க்கர் அடையாளம்:** இந்த அடையாளம் எக்ஸ்பிரஸ்வே தொடங்குவதையும் அதன் எண்ணையும் தருகிறது.




**Expressway Route Marker Sign:** This sign gives the information about the beginning of the Expressway and its number.

# அத்தியாயம் /Chapter – 5

## ரோடு மார்க்கிங்
## Road Marking

ரோடு மார்க்கிங்குகள் போக்குவரத்து தடங்கலின்றி இயங்குவதற்காக கோடுகளாகவும், டிசைன்களாகவும் பெயிண்ட்டில் வரையப்படுகின்றன அல்லது சாலைப் பரப்பில் நிறுவப் படுகின்றன அல்லது வாகனங்களுக்கான பார்க்கிங் அல்லது நோ பார்க்கிங் இடங்களுக்காக மற்றும் வேறுபல முக்கிய தகவல்களுக்காக குறிக்கப்படுகின்றன.

இந்தியாவில், சாலைகளில் மார்க்கிங் போடுவதற்கு வெள்ளை மற்றும் மஞ்சள் கலர்கள் பயன்படுத்தப்படுகின்றன. கேரேஜ்வே (சாலை) மார்க்கிங்குகளுக்காக வெள்ளை பொதுவாக பயன்படுத்தப்படுகிறது. கட்டுப்பாடுகளைக் காட்டுவதற்காக, மஞ்சள் கலர் பயன்படுத்தப்படுகிறது. நடைபாதை ஓரம் அல்லது பொருட்களைக் குறிக்க வெள்ளை அல்லது மஞ்சள் கலருடன் கருப்புக் கலரும் பயன்படுத்தப்படுகிறது.

கிராதிகளால் பிரிக்கப்படாத இருவழிச் சாலையில், எதிரெதிர் வரும் வாகனங்களை ஒழுங்குபடுத்தி, தடங்கலின்றி போவதற்கு உதவிட, சாலையின் மத்தியில் ஒரு கோடு போடப்படுகிறது. இந்த மத்தியக் கோடு:

i. பிரிக்கப்பட்ட ஒற்றைக் கோடு
ii. தொடர்ச்சியான கெட்டியான ஒற்றைப் பட்டைக் கோடு (தடை லைன்)
iii. பட்டையான இரட்டை லைன் அல்லது பட்டையான லைனும் பிரிக்கப்பட்ட லைனும் சேர்ந்தது.

பட்டையான ஒற்றை மற்றும் இரட்டைக் கோடுகள், மஞ்சள் அல்லது வெள்ளைக் கலரில், ஒன்றை ஒன்று தாண்டக்கூடாது அல்லது ஒன்றின்மீது ஒன்று படக்கூடாது. இரண்டு மத்தியக் கோடுகள் உள்ள சாலையில், ஒரு கோடு பட்டையாகவும், இன்னொன்று பிரிந்த கோடாகவும் இருக்கும்.

**இரட்டை வெள்ளை/மஞ்சள் கோடுகள்**

இரு வழிகளிலும் புலப்பாடு கட்டுப்படுத்தப் பட்டிருக்குமானால் தொடர்ச்சியான இரட்டைக் கோடுகள் பயன்படுத்தப் படுகின்றன. எந்த வழியில் இருந்து வாகனமும் இந்தக் கோடுகளைத் தாண்டுவதற்கு அனுமதி இல்லை.

**பட்டையான மற்றும் பிரிந்த கோடுகளின் சேர்க்கை**

உங்களுடைய பக்கத்தில் இருக்கும் கோடு பிரிந்து பிரிந்து இருக்குமானால், நீங்கள் தாண்டி, பாதுகாப்பாக இருந்தால் மட்டுமே முந்தலாம்.



Road markings are set of lines and designs painted or installed on road surface to facilitate smooth movement of traffic or for marked places for Parking or No parking of vehicles and many other vital information. These markings on carpeted roads to provide guidance and information to drivers and pedestrians.

In India, white and yellow colours are predominantly used for markings on roads. White is generally used for carriageway (road) markings. To show restrictions yellow markings are used. White or yellow together with black are used for kerb and object marking.

On a two way road, which is not divided by any railing or installations, the centre line separates the streams of traffic coming from opposite directions and eases movements. The centre line can be:

i. single broken line
ii. single continuous solid line (barrier line)
iii. a double solid line or a combination of solid line and broken line.

Single and double solid lines, whether white or yellow, must not be crossed or even overlapped. On a road with two centre lines, of which one is solid and the other broken, the solid line has significance only if it is on the left side of the combination as viewed by the driver. In such a case, the driver must be careful not to cross or overlap the centre line.

**Double white/yellow lines**

Double Continuous lines are used where visibility is restricted in both directions. Neither stream of traffic is allowed to cross the lines.

**Combination of solid and broken lines**

If the line on your side is broken, you may cross-straddle. Overtake it but only if it is safe to do so.

If the line on your side is continuous you must not cross to overtake.

Single Yellow Line: You don't cross this line except on turning Right or taking U-Turn.

உங்கள் பக்கத்தில் இருக்கும் கோடு தொடர்ச்சியாக இருக்குமானால், நீங்கள் முந்தக் கூடாது.

ஒற்றை மஞ்சள் கோடு: வலதுபுறம் திரும்புவது அல்லது யு-டர்ன் எடுப்பது நீங்கலாக, இந்தக் கோட்டைத் தாண்டக் கூடாது.

**ஸ்டாப் கோடு**

ஒரு ஸ்டாப் லைன் என்பது சாலையின் குறுக்கே ஜீப்ரா கிராஸிங் மற்றும் குறுக்குச் சந்திப்புக்கு முன்னால் தீட்டப்பட்டிருக்கும் ஒற்றை பட்டைக் கோடு ஆகும். அனைத்து வாகனங்களும், சிவப்பு சிக்னல் இருக்குமானால், அல்லது டிராபிக் போலீஸ் கை காட்டினால், இந்தப் பட்டைக் கோட்டுக்கு முன்னே நிறுத்தியாக வேண்டும். இந்தக் கோட்டைத் தாண்டினால் , நடந்து செல்வோருக்கு இடைஞ்சலாகி, வாகனப் போக்குவரத்துக்கு ஆபத்து ஏற்படக்கூடும்.

**வழி விடும் லைன்**

வழிவிடும் லைன் என்பது பொதுவாக சந்திப்புகளில் புள்ளிகளாக போடப்பட்டுள்ள இரட்டைக் கோடு ஆகும். இந்தக் கோடுகளுக்குத் துணையாக சாலைப் பரப்பின் மீது புள்ளிக் கோடுகளுக்கு முன்னால் தலைகீழான முக்கோணத்தில் வழிவிடு அடையாளம் தீட்டப்பட்டிருக்கும். அல்லது மார்க்கிங்கிற்கு பின்னால் ஒரு சாலை அடையாளம் வைக்கப்பட்டிருக்கும். பிரதான அணுகு சாலைக்குச் செல்லும் வாகனங்களுக்கு வழி விட வேண்டும்.

**பார்டர் அல்லது எட்ஜ் லைன்கள்**

இவை சாலையின் விளிம்பில் உள்ள தொடர்ச்சியான கோடுகளாகும். டிரைவர் பிரதான கேரிஜ்வேயில் எதுவரை பாதுகாப்பாக டிரைவ் செய்யலாம் என்னும் லிமிட் குறிக்கப்பட்டிருக்கும்.

**பார்க்கிங்கைத் தடை செய்யும் கோடுகள்**

சாலையின் பக்கவாட்டுச் சுவரில் "நோ பார்க்கிங்" அடையாளத்துடன் மஞ்சள் கலரில் தொடர்ச்சியாக இருக்கும் பட்டைக் கோடு எதுவரைக்கும் நோ பார்க்கிங் ஏரியா என்பதைக் காட்டுகிறது.

**நடந்து செல்வோருக்கான கிராஸிங்குகள்**

